# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 116/மா/2023**
**நாள் : 22.05.2023**

சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்.,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
சேலம் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, அசோக் நகர், 15வது அவுன்யூ, எண்.33 என்கிற முகவரியில் இயங்கும் சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸ் பிரைவேட் லிமிட்டின் 14.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 116/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, அசோக் நகர், 15வது அவுன்யூ, எண்.33 என்கிற முகவரியில் இயங்கும் சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர் தனது 14.3.2023 நாளிட்ட மனுவில் பின்வருமாறு புகார் தெரிவித்துள்ளார்.

We, Srinivas Waste Management Services (P) Ltd., was awarded the SWM work contract i.e., Collection, Segregation and Transportation of Municipal waste in Wards 2, 7, 12, 13, 14, 15, 16, 17, 18, 23, 24, 25, 26, 27, 29, 30, 31, 32, 33, and 45 of Salem Corporation vide Work Order Roc. No.F1/34523/2012 Dated 04.03.2014 for a period of 3 years which was further extended till 27.01.2019 vide Work order Roc. No. F2/34523/2012 Dated: 25.07.2018. We have successfully completed the work to the fullest satisfaction of the Salem Corporation.

During service, Salem City Municipal Corporation had withheld part amount while paying the monthly bills amounts to Rs.4,80,64,342/- as per letter Dated 15.02.2019

and 07.03.2019 which would be released after the submission of EPF and ESI details to Vice Chairman (National Commission of Scheduled Caste) and Salem City Municipal Corporation. Accordingly, we have submitted the complete EPF and ESI details to Vice Chairman (National Commission of Scheduled Caste) and Salem City Municipal Corporation City Health Officer (CHO).

On 21.06.2019 Vice Chairman (National Commission of Scheduled Caste) had conducted meeting with then Salem City Municipal Corporation Commissioner Mr. Sathish and ourselves represented by our Company representatives at Chennai Guest House and gave verbal confirmation for releasing the outstanding dues and accordingly the Salem Commissioner agreed for further arrangements.

But to our dismay, there was no arrangements by Salem Corporation rather involved us with PF enquiry by Asst. PF Commissioner. Further to his instructions, we had submitted complete PF contributions details for his inspections and the PF establishment had confirmed the Salem Corporation office in their orders for probable dues under damages u/s 14B and interest u/s 14Q of SWMS if any. Thus, we have faced all their instructions whenever imposed but our pending dues is still kept withheld citing shortage of funds. After our continuous request with Commissioner, Salem Corporation later released two part amount of Rs.25,00,000/- on 06.02.2021 and another amount of Rs.50,00,000/- on 17.02.2021 which the outstanding withheld amount becomes Rs.4,05,64,342/-

Further to our continuous requests, the Salem Corporation had involved us in their accounts reconciliation activity with their Audit team held in the month Aug 2022 and have finalized the withheld dues. Accordingly, we had approached the Commissioner, Salem City Municipal Corporation on 18.1.2023 to give orders for releasing the finalized withheld dues.

Hence, we request Hon'ble Sir, Tamilnadu Local Bodies Ombudsman, to kindly intervene the situation and provide justice for our longstanding dues held with Salem City Municipal Corporation.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, சேலம் மாநகராட்சி ஆணையாளரிடம் 9.5.2023 அன்று கோரப்பட்டது. சேலம் மாநகராட்சி ஆணையர் தனது 9.5.2023 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார் :**

சேலம் மாநகராட்சியில் தனியார் மையமாக்கப்பட்ட 21 கோட்டங்களுக்கு ஒப்பந்த நிறுவனமான M/s. சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஜூலை 2014 முதல் ஜனவரி 2019 வரை மேற்கொள்ளப்பட்டதற்கு அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய நிலுவை தொகையான ரூ.4,05,64,342/-க்கான விபரங்கள் அடங்கிய கோப்பு தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. தணிக்கை அறிக்கையின்

அடிப்படையில் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 15.05.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 09.5.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மேற்கண்ட நிறுவனத்தின் இயக்குநர் திரு. S. சங்கரநாராயணன் என்பவர் 15.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

"எங்களது M/s சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் நிறுவனத்தின் மூலம் சேலம் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஜுலை 2014 முதல் ஜனவரி 2019 வரை மேற்கொள்ளப்பட்டது. அதற்கான தொகையாக ரூபாய் 4.80 கோடி நிலுவையில் இருந்தது. அப்போது மேற்கண்ட பணிகளை மேற்கொண்ட பணியாளர்களின் ESI, PF போன்றவை எங்கள் நிறுவனத்தால் செலுத்தாததால் எங்களுக்கு சேர வேண்டிய நிலுவைத் தொகை அளிக்க இயலவில்லை என மாநகராட்சி அலுவலர்கள் தெரிவித்ததன் அடிப்படையில் மேற்கண்ட ESI, PF தொகை எங்களால் செலுத்தப்பட்டுவிட்டது. பின்னர் மேற்கண்ட 4.80 கோடி ரூபாயில், 75 லட்சம் ரூபாய் மட்டும் எங்களுக்கு செட்டில் செய்யப்பட்டது. மீதித் தொகையான ரூபாய் 4.05 கோடி இன்னும் எங்களுக்கு வழங்கப்படவில்லை. இது தொடர்பான ஆணையர் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோரை நேரில் தொடர்புகொண்டு முறையிட்டும் எவ்வித பயனும் இல்லை. மேற்கண்ட திடக்கழிவு மேலாண்மை பணிகளை எங்கள் நிறுவனம் முடித்தபோது அப்பணிகளில் எவ்வித குறைபாடும் இல்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே சுமார் 4 வருடங்களாக நிலுவையில் உள்ள மேற்கண்ட 4.05 கோடி ரூபாய் நிலுவைத் தொகையை சேலம் மாநகராட்சியால் எங்களுக்கு அளித்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்"எனத் தெரிவித்துள்ளார்.

**சேலம் மாநகராட்சி, மாநகர நல அலுவலர் 15.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

"சேலம் மாநகராட்சியில் தனியார் மையமாக்கப்பட்ட 21 கோட்டங்களில் M/s சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் நிறுவனத்தின் மூலம் சேலம் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஜுலை 2014 முதல் ஜனவரி 2019 வரை மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட பணிகளை மேற்கொண்டமைக்கான நிலுவைத் தொகையான ரூபாய் 4,05,64,342/- சேலம் மாநகராட்சியில் நிலுவையில் உள்ளது. அந்நிறுவனம் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொண்ட பணியாளர்களின் ESI, PF போன்றவற்றை செலுத்தத் தவறி, பின்னர் அவை முழுமையாக செலுத்தப்பட்டுவிட்ட நிலையில், மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை விவரங்கள் அடங்கிய கோப்பு தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. தணிக்கையின் அடிப்படையில் மேற்கண்ட நிலுவைத் தொகையை மனுதாரருக்கு வழங்கிட மாநகராட்சியால் நடவடிக்கை

மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளனர்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், சேலம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் மாநகர நல அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் 2014 முதல் 2019 வரை சேலம் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொண்டமைக்கான நிலுவைத் தொகை கோரி உரிய ஆவணங்கள் அளித்த பின்பும், பட்டியல் தொகையில் ரூ.4,05,64,342/- நிலுவையில் உள்ளதாகவும் பலமுறை சேலம் மாநகராட்சியில் முறையீடு செய்தும், அந்நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை என்பதால், தன் மனு மீது விசாரணை மேற்கொண்டு, மேற்கண்ட நிலுவைத் தொகையை தங்களுக்கு வழங்க ஆவன செய்யுமாறு கோரியுள்ளனர்.

இந்நேர்வு தொடர்பாக சேலம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மாநகர நல அலுவலரின் வாக்குமூலத்தில் மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய நிலுவை தொகை விபரங்கள் அடங்கிய கோப்பு தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது எனவும், தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

மேற்கண்ட நிறுவனத்தின் திடக்கழிவு மேலாண்மைப் பணி சேலம் மாநகராட்சியின் ஒப்பந்தப்படி 2019ல் முடிவடைந்து அப்பணிகளில் எவ்வித குறைபாடுகளும் சேலம் மாநகராட்சியால் தெரிவிக்காத நிலையில், நிலுவைத் தொகையை வழங்கக் கோரி பல நிலைகளில் மனு அளித்தும், நேரிடையாக உயர் அலுவலர்களிடம் முறையீட்டும் பயன் அளிக்கவில்லை என்பது தெரியவருகிறது. மேலும், சேலம் மாநகராட்சி 15.2.2019 மற்றும் 7.3.2019 நாளிட்ட கடிதங்களில் கோரிய EPF மற்றும் ESI முழு விவரங்கள் அந்நிறுவனம் சேலம் மாநகராட்சிக்கு அளித்த பின்பு 6.2.2021 அன்று ரூ.25,00,000/- மற்றும் 17.2.2021 அன்று ரூ.50,00,000/- வழங்கப்பட்டு, மீதமுள்ள ரூ.4,05,64,342/-ஐ 1½ வருடங்களுக்கு மேலாக வழங்காமல் இருப்பதற்கு குறிப்பிட்ட கோப்பு தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்ற சேலம் மாநகராட்சியின் வாதம் ஏற்புடையதல்ல. விசாரணைக்கு ஆஜராகிய மாநகர நல அலுவலரால் நிலுவைத் தொகை வழங்காமல் இருப்பதற்கு சரியான காரணத்தை தெரிவிக்க இயலவில்லை. இதிலிருந்து சேலம் மாநகராட்சி அலுவலர்கள் எவ்வாறு மெத்தனமாக கோப்புகளை கையாளுகிறார்கள் என்பது தெளிவாக தெரிகிறது. சேலம் மாநகராட்சியின் இச்செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது ஆகும்.

எனவே, சேலம் மாநகராட்சி ஆணையர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்தவாறு, இந்நேர்வில் தணிக்கை அறிக்கையினை காலம் தாழ்த்தாமல், உடனடியாக பெற்று, விதிகளுக்கு உட்பட்டு, மனுதாரருக்கு உரிய நிலுவைத் தொகையை வழங்க சேலம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. எடுக்கப்பட்ட

நடவடிக்கை குறித்து 15 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சேலம் மாநகராட்சி ஆணையருக்கு முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

The DMA is directed to get the papers verified as the Corporation Commissioner is not committing on any date by which the amount due to the petitioner will be settled but throwing the ball at the door of the Audit wing. The petitioner has deposed that he has remitted all statutory payments like EPF, ESI etc., No short-comings on the part of the Petitioner's work as a garbage – cleaning agency have been pointed out by the Salem Corporation. The balance payable to the petitioner is huge and the delay does not look innocuous and incidental but motivated, malicious. deliberate and wanton on the part of the Corporation Officials concerned. This Forum wishes to point out that if the Corporation drags on like this by projecting lame excuses, the Petitioner will be at liberty to challenge this delay in the Judicial fora and claiming interest also for the period of delay in the process of settlement of the dues. Besides, it should be noted that the Local Body is discharging such amounts to the other agencies currently on their service-rolls as could be understood during the hearing. An action taken report should be sent to this Forum within a month's time.

2023–ஆம் ஆண்டு மே திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) Tvt. S. Venkateshwaran and S. Sankaranarayanan,
M/s. Srinivas Waste Management Services Pvt. Ltd.,
33, 15th Avenue, Ashok Nagar, Chennai – 600 083.

2) ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி,
சேலம் - 636 001.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

24/5/23

உதவிப் பதிவாளர்.